# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண். 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை 600 106

தொலைபேசி எண்: 2363 5010, 2363 5011 நிகரி : 2363 8282, 2363 8283

மின்னஞ்சல் - tnsec.tn@nic.in இணையதளம் - www.tnsec.tn.nic.in


## செய்தி வெளியீடு

செய்தி வெளியீடு : 12 /2020 நாள்: 30.01.2020

ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் 11.01.2020-ல் நடைபெற்ற சாதாரண மறைமுகத் தேர்தல்களின்போது பல்வேறு காரணங்களுக்காக ஒத்தி வைக்கப்பட்ட மாவட்ட ஊராட்சி தலைவர் மற்றும் துணைத் தலைவர், ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் மற்றும் துணைத் தலைவர் மற்றும் கிராம ஊராட்சி துணைத் தலைவர் பதவியிடங்களுக்கான மறைமுகத் தேர்தல்களை தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் 30.01.2020-ல் நடத்திட அறிவிக்கப்பட்டிருந்தது.

மாவட்ட ஊராட்சித் தலைவர் பதவியிடம் 1 மற்றும் மாவட்ட ஊராட்சித் துணைத் தலைவர் பதவியிடம் 1 ஆகிய பதவியிடங்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்த மறைமுகத் தேர்தலில், போதிய எண்ணிக்கையில் உறுப்பினர்கள் வருகை தராத காரணத்தால் மறைமுகத் தேர்தல் நடைபெறவில்லை.

ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்களுக்கான 26 பதவியிடங்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்த மறைமுகத் தேர்தலில், நீதிமன்ற உத்தரவின் காரணமாக ஒரு இடத்திற்கும், போதிய எண்ணிக்கையில் உறுப்பினர்கள் வருகை தராத காரணத்தால் 9 பதவியிடங்களுக்கும் சட்டம், ஒழுங்கு பிரச்னை காரணமாக 2 பதவியிடங்களுக்கும் மறைமுகத் தேர்தல் நடைபெறவில்லை. மீதமுள்ள 14 பதவியிடங்களுக்கு நடைபெற்ற மறைமுகத் தேர்தலில் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் 7 இடங்களிலும், திராவிட முன்னேற்றக் கழகம் 4 இடங்களிலும், பாட்டாளி மக்கள் கட்சி 2 இடங்களிலும், சுயேட்சை வேட்பாளர் ஒரு இடத்திலும் வெற்றி பெற்றுள்ளனர்.

ஊராட்சி ஒன்றியக் குழுத் துணைத் தலைவர்களுக்கான 41 பதவியிடங்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்த மறைமுகத் தேர்தலில், நீதிமன்ற உத்தரவின் காரணமாக ஒரு இடத்திற்கும், போதிய எண்ணிக்கையில் உறுப்பினர்கள் வருகை தராத காரணத்தால் 16 பதவியிடங்களுக்கும் சட்டம், ஒழுங்கு பிரச்னை காரணமாக 2 பதவியிடங்களுக்கும் மறைமுகத் தேர்தல் நடைபெறவில்லை. மீதமுள்ள 22 பதவியிடங்களுக்கு நடைபெற்ற மறைமுகத் தேர்தலில் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் 5 இடங்களிலும், திராவிட முன்னேற்றக் கழகம் 10 இடங்களிலும், பாட்டாளி மக்கள் கட்சி ஒரு இடத்திலும், இந்திய தேசிய காங்கிரஸ் ஒரு இடத்திலும் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகம் ஒரு இடத்திலும் சுயேட்சை வேட்பாளர்கள் 4 இடங்களிலும் வெற்றி பெற்றுள்ளனர்.

(தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய ஆணைப்படி)

30/1/2020

மக்கள் தொடர்பு அலுவலர்